# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)**
**General Certificate of Education (Ord.Level) Third Term Examination- 2022 (2023)**

| நேரம்: 3.00 மணித்தியாலங்கள் | நாடகமும் அரங்கியலும் - I,II | பாட எண் : 51 T I, II |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................

மேலதிக வாசிப்பு நேரம்: 10 நிமிடங்கள்

**கவனிக்க:**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

## பகுதி – I

01. ஆற்றுகைக்கலைகளின் அடிப்படைப்பண்பு?
1. நேரடித்தொடர்பாடல்
2. நிலையியற்கலை
3. பிரதி பண்ணக்கூடியது
4. தனியாக ரசிக்கக்கூடிய கலை

02. நாடகம் ஒன்றின் வடிவத்தினை உருவாக்கும் செயற்பாடு?
1. நடிகனைச்சார்ந்தது
2. விமர்சகனைச்சார்ந்தது
3. நெறியாளனைச்சார்ந்தது
4. தயாரிப்பாளனைச்சார்ந்தது

03. நாடகம் எனும் கலைவடிவம் தோன்றியது,
1. நாட்டியத்திலிருந்து
2. சடங்கிலிருந்து
3. பொம்மலாட்டத்திலிருந்து
4. நிழலாட்டத்திலிருந்து

4. நாடகம் ஒன்றினை நிகழ்த்தும்போது நிதிரீதியிலான இலாபத்தினைப் பெறுவதற்கு உரித்துடையவர்?
1. மேடை முகாமையாளர்
2. தயாரிப்பாளன்
3. நடிகன்
4. நெறியாளன்

05. ஆடம்பரமான மேடைப்பொருட்கள், அழகான சீனறிகள் காட்சியமைப்பாக பயன்படுவது?
1. மனோரதிய நாடகங்களில்
2. யதார்த்த நாடகங்களில்
3. குறியீட்டு நாடகங்களில்
4. கூத்தில்

06. "நாடகமோடி" எனும் பதம் குறிப்பது?
1. நாடகத்தின் கருப்பொருளை
2. நாடகத்தின் மோதுகையினை
3. நாடகத்தின் வடிவத்தினை
4. நாடகத்தின் காட்சியமைப்பினை

07. நாடகத்தில் வழங்கப்படும் இசையாக அமையாதது?
1. நாடக உணர்வுநிலையினை வெளிப்படுத்த
2. நாடக சூழ்நிலைகளை வெளிப்படுத்த
3. நாடகத்தின் உரையாடலை மறைக்க
4. நாடகக்காட்சிகளின் பலவீனத்தை மறைக்க

08. நாடகத்தில் நடிகனுக்கான அசைவுகளில் பொருத்தமற்றது?
1. பார்வையாளரை நோக்கி அமைக்கப்படும்
2. பாத்திரப்பண்பிற்கேற்ப அமைக்கப்படும்
3. நாடகத்தின் சூழ்நிலைக்கேற்ப அமைக்கப்படும்
4. பாத்திரத்தின் மனநிலைக்கேற்ப அமைக்கப்படும்

09. போலச்செய்தல் கலைக்கு அடிப்படை எனக் கூறியவர்,
1. அரிஸ்டோட்டில்
2. தொம்சன்
3. பேனாட்சா
4. லூடர்ஸ்

LMDM.lk

10. வேடஉடை, ஒப்பனையின் பிரதான பயன்பாடு?
    1. பாத்திர அந்தஸ்தை எடுத்துக்காட்டும்  2. பாத்திர அசைவுகளுக்கு உதவும்
    3. பாத்திர பண்பிற்கு உதவும்  4. பாத்திர நோக்கத்தினை எடுத்துக்காட்டும்

11. பாரம்பரிய ஒளியூட்டுகைக்கு உதவியது?
    1. பொட்டொளி  2. பரப்பொளி  3. தீப்பந்தம்  4. பெருக்கொளி

12. நடிகன் நடிக்கும்போது பதிற்குறிகளை வெளிப்படுத்துபவர்?
    1. பார்ப்போர்  2. நெறியாளன்  3. நினைவூட்டுனர்  4. தயாரிப்பாளன்

13. பிறமொழி பேசுபவர்களும் விளங்கிக்கொள்வதற்கு உதவுவது?
    1. புதிதளிப்பு நாடகம்  2. ஊமம்  3. யதார்த்த நாடகம்  4. இலக்கிய நாடகம்

14. பாத்திரத்தினை சித்திரிப்பதற்கு உதவுவது?
    1. மோதுகை  2. கருப்பொருள்  3. போலச்செய்தல்  4. மோடி

15. "நேர்முகப்பரீட்சை ஒன்றினை எதிர்கொள்ளல்" என்பது,
    1. கருவினை படைப்பாக்கம் செய்தல்  2. கதையினை படைப்பாக்கம் செய்தல்
    3. சூழ்நிலையினை படைப்பாக்கம் செய்தல்  4. மனநிலையினை படைப்பாக்கம் செய்தல்

16. நாடக எழுத்துருவில் மறைந்து காணப்படுவது?
    1. கரு  2. கதை  3. பாத்திரப்பண்பு  4. நாடகமோடி

17. கதைக்கும் நாடகத்திற்குமிடையே காணப்படும் தொடர்பு நிலை,
    1. சொல்லாடல்கள் காணப்படுதல்  2.பார்வையாளர் காணப்படுதல்
    3. தொடர்களாகக் காணப்படுதல்  4.இரசனை உணர்வு காணப்படுதல்

18. நாடகம் ஒன்றிற்குரிய பார்வையாளர்?
    1. பொது பார்வையாளர்  2. இலக்குப் பார்வையாளர்
    3. மாதிரி பார்வையாளர்  4. தெரிந்தெடுக்கப்பட்ட பார்வையாளர்

19. திரை விலகியவுடன் பார்வையாளர் முதலில் காண்பது?
    1. காட்சியமைப்பு  2. வேடஉடை  3. ஒளி  4. ஒப்பனை

20. நடிகனது அசைவியக்கங்களை தீர்மானிப்பவர்?
    1. தயாரிப்பாளன்  2. ஒளியமைப்பாளன்  3. நெறியாளன்  4. மேடைமுகாமையாளன்

21. நாடகப் படைப்பாக்கத்தில் இறுதியாக இணைத்துக் கொள்ளப்படும் மூலகம்?
    1. காட்சியமைப்பு  2. வேடஉடை  3. இசை  4. ஒளி

22. "புதியதொருவீடு" நாடகத்தின் பெயர் குறிப்பது
    1. கருப்பொருளை  2. காட்சியமைப்பினை
    3. நாடகத்தின் ஆரம்பத்தினை  4. நாடகத்தின் முடிவினை

23. "ஆரொடு நோகேன்?" நாடகத்தில் இறுதியில் இடம்பெறும் காட்சி?
    1. திருமணக்காட்சி  2. பிறந்தநாள் காட்சி
    3. திருமணநினைவு தினக்காட்சி  4. பாடசாலைக்குச் செல்லும் காட்சி

24. பறைமேளக்கூத்து ஆடப்படும் மாவட்டம்?
    1. யாழ்ப்பாணம்  2. மட்டக்களப்பு  3. மன்னார்  4. முல்லைத்தீவு

25. சிறுகோல்களை ஒன்றுடன் ஒன்று தட்டி ஆடும் கூத்து
    1. வசந்தன்கூத்து  2. மகிடிக்கூத்து  3. பறைமேளக்கூத்து  4. வடமோடி

26. கலையரசு சொர்ணலிங்கம் தோற்றுவித்த அரங்க நிறுவனம்?
    1. வசந்தகான சபா  2. லங்கா சுபோத விலாச சபா
    3. சரஸ்வதி சபா  4. சுகிர்த விலாச சபா

LMDMUnit

27. வேடமுகம், கைப்பொருள் என்பனவற்றினை விதானிப்பவர்?
1. மேடைமுகாமையாளர் 2. தயாரிப்பாளன் 3. நெறியாளன் 4. ஒப்பனையாளன்

28. பேராசிரியர் வித்தியானந்தன் நவீனமயப்படுத்திய தென்மோடிக்கூத்து?
1. கர்ணன்போர் 2. நொண்டி நாடகம் 3. இராவணேசன் 4. வாலிவதை

29. கிருஸ்ணாழ்வார் புகழ்பெற்ற நாடக வடிவம்?
1. வடமோடி 2. தென்மோடி 3. இசைநாடகம் 4. சொல்லாடல் அரங்கு

30. காட்சியமைப்பினை விதானிக்கும்போது கவனிக்க வேண்டியது?
1. களம் 2. சொல்லாடல் 3. நடிகர் 4. காலம்

31. நடிகனுக்கு அவசியமானது?
1. பயிற்சி 2. ஆர்வம் 3. கற்பனை 4. கவனம்

32. சொக்கரி ஆடப்படும் அரங்கவெளி,
1. தானயம்பல 2. கரலிய 3. களத்துமேடு 4. வட்டக்களரி

33. நாடகத்தின்பண்புகளைக் கண்டுகொள்ள உதவுவது?
1. சடங்கு 2. விளையாட்டு 3. பயிற்சி 4. தொழில்

34. நாடகத்தை வளர்ச்சியடையச் செய்வது?
1. குறை கண்டுபிடித்தல் 2. விமர்சனம் 3. பாராட்டு 4. பரிசு

35. வேகமாக பார்வையாளரை தேடிச்செல்ல உதவும் அரங்க வடிவம்?
1. மேடை நாடகம் 2. தெருவெளி நாடகம் 3. இலக்கிய நாடகம் 4. அரசியல் நாடகம்

36. படம் குறிக்கும் அரங்க வகை?
1. சிறுவர் நாடகம் 2. பாடசாலை நாடகம்
3. இலக்கிய நாடகம் 4. அரச நாடகம்



37. படம் குறிக்கும் அரங்க வகை?
1. சொக்கரி 2. நாடகம்
3. கோலம் 4. நூர்த்தி



38. படத்திலுள்ள இசைக்கருவியைப் பயன்படுத்தும் அரங்க வடிவம்?
1. வடமோடி 2. காத்தவராயன் சிந்துநடைக்கூத்து
3. வடபாங்கு 4. காமன் கூத்து



39. படத்திலுள்ள அரங்கக்கலைஞர்,
1. பேராசிரியர் மௌனகுரு
2. பேராசிரியர் கணபதிப்பிள்ளை
3. பேராசிரியர் வித்தியானந்தன்
4. பேராசிரியர் சிவத்தம்பி



40. படத்திலுள்ள அரங்கவெளி?
1. வட்டரங்கு 2. வட்டக்களரி
3. கரலிய 4. தெருவெளி அரங்கு



LMDMUnit

## பகுதி – I

➢ **முதலாம் வினா உட்பட விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. (அ) இலங்கை தமிழ் பாரம்பரிய அரங்கு ஒன்றினைக் குறிப்பிடுக.
(ஆ) "ஆரொடு நோகேன்" நாடகத்தில் பிள்ளைகள் நடிக்கும் நாடகத்தின் பெயர் யாது?
(இ) ஊர்வலப்பண்பு கொண்ட சடங்கு நாடகமொன்று தருக.
(ஈ) ஒயிலாட்டம் ஆடப்படுவதன் நோக்கம் யாது?
(உ) மலையகத்தில் நிகழ்த்தப்படும் கூத்து ஒன்று தருக.
(ஊ) தோற்கருவி ஒன்று தருக.
(எ) "மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்" எனும் நூலின் ஆசிரியர் யார்?
(ஏ) திருமறைக்கலாமன்றத்தினை நிறுவியவர்,
(ஐ) ஆற்றுகைக்கலைகளின் இயல்புகள் இரண்டு தருக.
(ஒ) சிறுவர் நாடகங்கள் இரண்டு தருக. (12 புள்ளிகள்)

02. 1. நடிகனின் பணியை மதிப்பிடுக. (4 புள்ளிகள்)
2. நடிகர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய அவசியமான பண்புகளைத் தருக. (4 புள்ளிகள்)
3. நாடகத்தில் பார்ப்போர் பங்கு பற்றி மதிப்பிடுக. (4 புள்ளிகள்)

03. 1. நெறியாளர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய தகைமைகள் யாவை? (4 புள்ளிகள்)
2. நெறியாளர் ஒருவர் நிறைவேற்றும் பொறுப்புக்களைத் தருக. (4 புள்ளிகள்)
3. தயாரிப்பாளரின் பணிகளை மதிப்பிடுக. (4 புள்ளிகள்)

4. 1. நாடக எழுத்துரு ஒன்றில் காணப்படும் அம்சங்களைப் பட்டியற்படுத்துக. (3 புள்ளிகள்)
2. ஆரொடு நோகேன் நாடகத்தின் பாத்திரங்களை பட்டியற்படுத்துக. (4 புள்ளிகள்)
3. ஆரொடு நோகேன் நாடகத்தில் உம்மைக் கவர்ந்த காட்சிபற்றிக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

5. 1. மட்டக்களப்பில் நிகழ்த்தப்படும் கூத்துகளைப் பட்டியற்படுத்துக. (3 புள்ளிகள்)
2. யாதாயினும் ஒரு கூத்தினைத் தெரிவு செய்து அதன் பண்புகளை இனங்கண்டு விளக்குக. (4 புள்ளிகள்)
3. சொக்கரி அரங்கின் அம்சங்களை விளக்குக. (5 புள்ளிகள்)

6. பின்வருவோரின் பணிகளை மதிப்பிடுக.
1. கலையரசு சொர்ணலிங்கம் (4 புள்ளிகள்)
2. பேராசிரியர் கணபதிப்பிள்ளை (4 புள்ளிகள்)
3. பேராசிரியர் வித்தியானந்தன் (4 புள்ளிகள்)

07. பின்வருவன பற்றி சிறுகுறிப்பு வரைக.
1. இசை விதானிப்பு (4 புள்ளிகள்)
2. புதியதொருவீடு நாடகத்தில் மயிலியின் பாத்திரப்பண்பு (4 புள்ளிகள்)
3. நடிப்பு சார் பயிற்சிகள் (4 புள்ளிகள்)

LMDMUnit